Dr. H. V. HANDE : This is a very important question and I may be allowed to put one more supplementary.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனையோ பேர்கள் கையை தூக்கிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த கேள்வி, கேள்வி எண் 200.

Thiru K. VINAYAKAM : Let us have an half-hour debate on this question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு பார்த்துக் சொள்ளலாம். கேள்வி எண் 200.

Director of Harijan Welfare

* 200. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agricultural and Harijan Welfare be pleased to state—

Whether there is any proposal to vest discretionary powers with the Director of Harijan Welfare with a view to the rendering of imely assistance to the Scheduled Caste/Tribe and other Backward Classes people?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

Dr. H. V. HANDE : s it not a fact that because this officer does not have the discretionary power, he is not able to give number of grant to poor and deserving Harijan families who are in need of help. In view of this difficulty, will the Government consider or re-consider the possibility of vesting the extra discretionary power with this officer so that he can give ex-gratia gant to a number of poor Harijan families in extraordinary cases like fire, etc.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹரிஜன மக்களுக்கு திடீரென்று ஏற்படுகிற விபத்துக்களை உடனே சென்று கவனிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட நல அதிகாரி அவர்களும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறார்கள். பிறகு அவர்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்காக டிஸ்கிரீஷனரி முறையில் இயக்குனர் அவர்கள் ரூ. 5,000-க்கு மேற்படாத அளவிற்குச் செலவு செய்யலாம் என்று தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. உடனேயே அவர்களுக்கு அந்த நேரத்தில் செய்வதற்கு வசதி இல்லை. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட நல அதிகாரியோடு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்.

திரு. பெ. சீனிவாசன் : ஹரிஜன மக்களுக்காகப் பல துறைகளில் அரசு பணம் செலவு செய்கிறது. இப்படிச் செலவு செய்யப்படுகிற பணத்தால் ஹரிஜன மக்கள் எந்த அளவிற்கு நன்மை அடைகிறார்கள் என்ற புள்ளிவிவரத்தை ஆண்டுதோறும் அரசாங்கம் தயாரித்து வருகிறதா?

(விடை இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி வேறு.

1969 செப்டம்பர் 11]

திரு. என். வரதராஜன் : தஞ்சையில் கீழ்வெண்மணியில் எரிந்து போன குடிசைகளைக்கண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்ணீர் வடித்தார்கள் என்று பத்திரிகைகளில் படித்தோம். இன்னும் அந்தக் குடிசைகள் கட்டப்படாமல் இருக்கின்றன. அதிகாரிகளுக்குப் போதுமான அதிகாரங்கள் இல்லாததினால்தான் அந்தத் தாமதம் ஏற்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கீழ் வெண்மணியில் தீப்பற்றி எரிந்த 25 ஹரிஜன குடும்பங்களுக்கு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, அக்குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் புத்தகங்கள் எரிக்கப்பட்டிருந்த காரணத்தினால், அவர்களின் ஆடைகள் எரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அதற்காக உடனடியாக இயக்குனர் அவர்கள் தமக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து ரூ. 1,250 உடனே கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டது. எரிக்கப்பட்ட 25 குடும்பங்கள் இருந்த இடமானது ஒரு தனிப் பட்டவருக்குச் சொந்தமான இடம். அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்தான் தீ வைத்தார் என்றெல்லாம் அந்த நேரத்தில் சொல்லப் பட்டது. அந்தக் குடும்பங்கள் மீண்டும் அந்தப் பகுதியில் வாழ விரும்புகிறார்களா என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் அதற்கு ஒத்துக் கொண்ட பிறகுதான் மீண்டும் அந்த இடத்தை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக இரண்டு இரண்டு வீடுகளாகச் சேர்த்து ரூ. 3,200-க்கு கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கு வாழ விரும்புகிறார்களா இல்லையா என்பது இப்போது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

கோவை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம்

*201 வினா.—**திரு. கே. என். குமாரசாமி** : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு மான்யமாக பணம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : ஹரிஜனங்களுக்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டு அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டும்கூட வீடுகள் கட்டப்படாமல் அவை பல ஆண்டுகளாக சும்மா இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அது சம்பந்தமாக சீக்கிரம் முடிவெடுத்து அதற்குண்டான தொகைகளை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?